**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>O.S. No. 41/2022</u>**

**<u>நாள்.18.06.2026</u>**

**<u>வா.சா. 1</u>- அய்யனார்**

**<u>1வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆதியில் தபசில் 1, 2 சொத்துக்கள் ஆதியில் கிருஷ்ண கோனார் மற்றும் 1வது பிரதிவாதிக்கு கூட்டாக கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 21.10.2020 ல் கிருஷ்ண கோனார் மற்றும் 1வது பிரதிவாதி ஆகியோர் வா.சா.ஆ.1 மூலமாக பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். பாகப்பிரிவினை ஆவணத்தின்படி வழக்கு 1வது தபசில் சொத்து எனது தந்தை கிருஷ்ண கோனாருக்கு 2 வது தபசில் சொத்து 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1வது தபசில் 5 வது அயிட்டமாக புல எண்.312/1A யில் உள்ள கிணறு காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் அதில் பிரிவின்றி பாதி பங்கு எனது தந்தைக்கு என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 வது தபசில் 6 வது அயிட்டமாக புல எண்.312/1A யில் உள்ள கிணற்றில் பாகப்பிரிவினையின்படி சென்ட் 2.5 நீக்கி மீதம் 37.5 1 வது பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 வது தபசில் 7 வது அயிட்டமாக 1வது பிரதிவாதிக்கு புல எண்.312/1A யில் உள்ள கிணறு வகையறாவில் 2.5 சென்ட்டில் 1 வது பிரதிவாதிக்கு பிரிவின்றி பாதி பங்கு என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பிராதில் சொல்லியுள்ள தபசில் விபரங்கள் என்னால் சொல்லி தயாரிக்கப்பட்டுள்ளன என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி புல எண்.312/1A யில் மட்டுமே கிணறு வாய்க்கால் கமலைக்குழி உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பிராதில் 3 வது தபசில் விபரத்தில் கிணறு வாய்க்கால் என புல எண்.312/1A உடன் புல எண்.313/1C, 313/2D, 313/2C, 313/2B, 313/2C ல் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ஆனால் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி புல எண்.312/1A யில் மட்டுமே கிணறு வாய்க்கால் கமலைக்குழி உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது வேறு புல எண்களில் கிணறு வாய்க்கால் கமலைக்குழி உள்ளதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான் ஆனால் பத்திரத்தில் தவறாக உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் தவறு என நான் சொல்வது கிணறு இருக்கும் திசையை மட்டும் தான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி புல எண்.312/1A யில் உள்ள கிணறு வடமேற்கு பகுதியில் உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் பிறப்பிப்பதற்கு முன்பு புல எண்.312/1A யில் உள்ள கிணறு தவறாக திசையில் காண்பிக்கப்பட்டுள்ளது என சீர்திருத்த பத்திரம் எதையும் செய்துகொள்ள நான் முயற்சிக்கவில்லை என்றால் என் அப்பா ஆவணம் அதனால் எனக்கு தெரியவில்லை. என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.2 புல எண்.313 க்கானது என்றால் சரிதான். கிணறு அமைந்துள்ள புல எண்.312 க்கான புல வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தை எப்போது இறந்தார் என்றால் 2017 ல். என் தந்தைக்கு 2 மனைவிகள் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு 2 மனைவிகள் உண்டு, அதில் முதல் மனைவி மூலம் பிறந்த முத்துசாமி என்ற மகன் உண்டு என்றால் சரியல்ல. எனது தாயார் உயிருடன் உள்ளாரா அவரது பெயர் என்ன என்றால் உயிருடன் இருக்கிறார் அவரது பெயர் ஆவுடையம்மாள். எனது உடன்பிறந்தவர்கள் ராமலட்சுமி, சீனிவாசன், சுரேஷ், வெள்ளத்தாய், மாரித்தாய், கவிதா என்றால் சரிதான். எனது பிராதில் வா.சா.ஆ.1 ன்படி எனது தந்தைக்கு கிடைத்த சொத்தை வாய்மொழியாக பிரித்துக்கொண்டதாக சொல்லியுள்ளேன் அந்த வாய்மொழி பாகப்பிரிவினை எப்போது நடைபெற்றது என பிராது பத்தி 4 ல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் எனது உடன்பிறந்தவர்கள் ராமலட்சுமி, சீனிவாசன், சுரேஷ், வெள்ளத்தாய், மாரித்தாய், கவிதா ஆகியோருக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.6 1வது பிரதிவாதி கடந்த 2011ல் வா.சா.ஆ.1 மூலமாக அவரது பாகத்திற்கு கிடைத்த சொத்துக்களை மனைப் பிரிவுகளாக பிரித்ததை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் அந்த விபரம் எங்களுக்கு தற்போது தான் தெரியும். நான் எத்தனை ஆண்டுகளாக தபசில் சொத்து உள்ள ஊரில் குடியிருக்கிறேன் என்றால் பிறந்ததில் இருந்து அங்கு தான் இருக்கிறேன். பிராது 1வது பிரதிவாதி கடந்த 2011ல் வா.சா.ஆ.1 மூலமாக அவரது பாகத்திற்கு கிடைத்த சொத்துக்களை மனைப் பிரிவுகளாக பிரித்திருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிராதில் 10.07.2021ல் 1வது பிரதிவாதி கிணற்று வாய்க்காலை முற்றிலுமாக அழித்து சேதப்படுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அப்படி 1வது பிரதிவாதி கிணற்று வாய்க்காலை முற்றிலுமாக அழித்து சேதப்படுத்தியதற்காக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவோ, வேறு நடவடிக்கை எடுத்ததாகவோ எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். 10.07.2021 தேதிக்கு பிறகு கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவாளருக்கு 15.07.2021ல் வா.சா.ஆ.3 அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 அறிவிப்பில் 1வது பிரதிவாதி கிணற்று வாய்க்காலை முற்றிலுமாக அழித்து சேதப்படுத்தியதாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 1வது பிரதிவாதி கிணற்று வாய்க்காலை முற்றிலுமாக அழித்து சேதப்படுத்தியதாக 1வது பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். அப்பா இறந்தபிறகு எப்போது பாகப்பிரிவினை செய்துகொண்டோம் என்றால் ஞாபகமில்லை. வழக்கிற்கு முன்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நான் மனுதாரராக இருந்து 1 மற்றும் 2 பிரதிவாதி மீது நீதிப்பேராணை மனு எண்.133/2022 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.B.A. தமிழ் வழியில் படித்துள்ளேன். மேற்படி நீதிப்பேராணை மனுவில் 1வது பிரதிவாதிக்கு சார்பு செய்யப்பட்ட அபிடவிட் என்னால் நீதிப்பேராணை மனுவில் தாக்கல் செய்யப்பட்டது அது தான் என்னிடம் காட்டப்படும் அபிடவிட் என்றால் சாட்சி அபிடவிட் ஆவணத்தைப் பார்த்துவிட்டு சரிதான் என சாட்சியம் அளிக்கிறார்.

<u>**சாட்சி நீதிப்பேராணை மனுவில் தன்னால் தாக்கல் செய்யப்பட்ட அபிடவிட்டை இது தான் என ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**</u> நீதிப்பேராணை மனு எண்.133/2022 கடந்த 06.01.2022 ல் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் தெரியாது. மேற்படி நீதிப்பேராணை மனு எண்.133/2022 என்ன ஆனது என்றால் என்ன ஆனது என நான் கேட்டுக்கொள்ளவில்லை. நீதிப்பேராணை மனு எண்.133/2022 கடந்த 06.01.2022 ல் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது அது தெரிந்தும் நான் வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி நீதிப்பேராணை மனு எண்.133/2022 கடந்த 06.01.2022 ல் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டபிறகு, இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் 22.02.2022 ல் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் பிராதில் மேற்படி நீதிப்பேராணை மனு எண்.133/2022 தாக்கல் செய்யப்பட்ட விபரத்தை சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. நீதிப்பேராணை மனு எண்.133/2022 ல் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.1 அபிடவிட் 03.01.2022 ல் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 அபிடவிட்டில் எனது தகப்பனார் இறந்தபிறகு அவரது வாரிசுகள் அனைவரும் 1 வது தபசில் சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வருவதாக பத்தி 2 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.1 அபிடவிட்டில் எனது தகப்பனார் இறந்தபிறகு அவரது வாரிசுகள் அனைவரும் 1 வது தபசில் சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வருவதாக பத்தி 2 ல் சொல்லியுள்ளேன் வழக்கிற்காக பொய்யாக தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு போட்ட காலத்திலிருந்து இன்றுவரை வாய்க்கால் சேதப்படுத்தப்பட்டுள்ளதை காட்டவும், 3 வது தபசில் புல எண்களின் வழியாக வாய்க்கால் செல்கிறது என்பதைக் காட்டவும் நீதிமன்றம் மூலமாக ஆணையர் நியமிக்க நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

ஆணையரை நியமனம் செய்தால் 3 வது தபசில் புல எண்கள் விபரம் தவறு என்பது நீதிமன்றத்திற்கு தெரியவந்துவிடும் என்பதால் ஆணையர் நியமிக்க நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதி வாய்க்காலை அழித்து மனைப்பிரிவுகளாக மாற்றி 3 முதல் 9 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துள்ளார் என 3 முதல் 9 பிரதிவாதிகளை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 3 முதல் 9 பிரதிவாதிகளின் கிரைய ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என நான் பரிகாரம் வழக்கில் கேட்கவில்லை என்றால் சரிதான். 1வது பிரதிவாதி எதிர்வழக்குரையில் சொல்லிய விபரங்களை வழக்கறிஞர் மூலமாக தெரிந்துகொண்டேனா என்றால் ஆமாம். 1வது பிரதிவாதி எதிர்வழக்குரையில் கோட்டூர்சாமி என்பவருக்கும் வீட்டு மனையை கிரையம் கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 1வது பிரதிவாதி கூடுதல் எதிர்வழக்குரையில், வா.சா.ஆ.1 ல் 2 வது தபசில் 7 வது அயிட்ட சொத்து முருகன் என்பவருக்கு 1வது பிரதிவாதி 25.04.2011 ல் கிரையம் கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் தெரியாது. 1வது பிரதிவாதி கூடுதல் எதிர்வழக்குரையை வழக்கறிஞர் தெரிவித்தாரா என்றால் தெரியாது. 1வது பிரதிவாதி 02.03.2011 ல் அரசுக்காக வேண்டி மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு சாலைக்காக இடத்தை கிரையம் கொடுத்திருப்பதாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் தெரியாது. 1வது பிரதிவாதி கூடுதல் எதிர்வழக்குரையை வழக்கறிஞர் தெரிவித்தாரா அதில் உள்ள விபரங்களை தெரிவித்தாரா என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ன்படி எனது தந்தையின் பாகத்திற்கு கிடைத்த சொத்துக்கள் அவரது முதல் மனைவியின் வாரிசுகளுக்கு பங்கு உண்டு என்று சொல்லியுள்ளார் அவர்களை கட்சி சேர்க்க வேண்டும் என சொல்லியுள்ளார் என்றால் சொல்லியுள்ளார் அவர் சொல்லியவர்களை கட்சி சேர்க்க வேண்டியதில்லை. இந்த வழக்கில் நான் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு போடவில்லை என்றால் சரிதான். 2 வது பிரதிவாதி சார்பதிவாளர் மீது பதிவு ஆவணம் செய்யக்கூடாது என பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான்.

ஆனால் இந்த வழக்கில் தமிழக அரசை தரப்பாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தமிழக அரசை தரப்பாக சேர்க்கவில்லை என்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**1வது பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.18 13:24:37 +0530